பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

14 06 2024 **FRIDAY** 7 15 **PM**

தலைப்புச் செய்திகள்

1. பிரதமர் திரு. நரேந்திர மோடி, இத்தாலியில் தற்போது நடைபெறும் ஜி-7 உச்சிமாநாட்டில் பங்கேற்றுள்ளார்.

2. ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்புசூழல் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுதில்லியில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

3. பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகள் மேம்படுத்தப்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. **Jual Oram** தெரிவித்துள்ளார்

4. ஊடகங்கள் தவறான செய்திகளை பரப்பினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

5. **Perugia** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சுமித் நாகல் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்

>>>>><<<<<

இத்தாலியில் தற்போது நடைபெற்று வரும் ஜி-7 உச்சிமாநாட்டில் பிரதமர் திரு. நரேந்திர மோடி பங்கேற்றுள்ளார்.

**Apulia** நகரில் தொடங்கியுள்ள இந்த மாநாட்டில் பிரதமர் இன்னும் சற்று நேரத்தில் உரையாற்றவுள்ளார்.

இதில் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டுள்ள போப் ஃபிரான்சிஸ்-ஸை பிரதமர் திரு. நரேந்திர மோடி சந்தித்து பேசினார்.

மாநாட்டில் கலந்து கொண்டுள்ள பல்வேறு நாடுகளின் தலைவர்களுடனும் பிரதமர் கலந்துரையாடினார்.

முன்னதாக, மாநாட்டிற்கிடையே, பிரான்ஸ் அதிபர் திரு. இமானுவேல் மேக்ரோன், இங்கிலாந்து பிரதமர் திரு. ரிஷிசுனக், யுக்ரைன் அதிபர் திரு. **Voladymyr Zelensky** ஆகியோரை சந்தித்து இருதரப்பு பேச்சுக்கள் நடத்தினார்.

அப்போது, பாதுகாப்பு, தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு கடல்வழி பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அந்த நாடுகளுடனான ஒத்துழைப்பை மேம்படுத்துவது குறித்து விவாதிக்கப்பட்டதாக சமூகவலைதளத்தில் பிரதமர் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>><<<<<

ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு சூழல் குறித்து மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுதில்லியில் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்டார்.

அமர்நாத் யாத்திரை தொடங்கவுள்ள நிலையில், ஜம்மு காஷ்மீரின் பாதுகாப்பு நிலைமை குறித்து ஆய்வு செய்வதற்காக நாளை மறுநாள், ஆலோசனை கூட்டத்திற்கு ஏற்பாடு செய்யுமாறு அதிகாரிகளுக்கு அவர் அறிவுறுத்தினார்.

இந்த கூட்டத்தில் ஜம்மு காஷ்மீர் துணை நிலை ஆளுநர் திரு. மனோஜ் சின்ஹா, தேசிய பாதுகாப்பு ஆலோசகர் திரு. அஜீத் தோவல், உள்துறை அமைச்சக உயரதிகாரிகள், ராணுவம் மற்றும் காவல்துறையைச் சேர்நத அதிகாரிகள் பங்கேற்றனர்.

>>>>><<<<<

நீட் தேர்வு எழுதிய மாணவர்களின் நலன்களை பாதுகாக்க மத்திய அரசு உறுதிபூண்டுள்ளதாக கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை பதிவிட்டுள்ள அவர், எந்தவொரு மாணவனும் பாதிக்கப்படாமல் இருக்கும் வகையில், அவர்களின் கோரிக்கைகள் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படும் என்று குறிப்பிட்டுள்ளார்.

நீட் தேர்வு விவகாரம் தொடர்பான பிரச்சினை, தற்போது உச்சநீதமன்ற விசாரணையில் உள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

உச்சநீதிமன்ற உத்தரவின்படி, மாணவர்களின் நலன்களுக்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு எடுக்கும் என்று அவர் உறுதியளித்துள்ளார்.

நீட் தேர்வில் வெற்றி பெற்றவர்களுக்கான கலந்தாய்வு விரைவில் நடைபெறும் என்றும் அதில் எந்தவொரு குழப்பமும் தேவையில்லை என்றும் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், நீட் தேர்வு விவகாரத்தில் மத்திய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து காங்கிரஸ் தலைவர் திரு. மல்லிகார்ஜுன கார்கே கேள்வி எழுப்பியுள்ளார்.

தேசிய தேர்வு முகமையை அரசு தவறாக பயன்படுத்தியிருப்பதாக சமூகவலைதளத்தில் அவர் குறை கூறியுள்ளார்.

>>>>><<<<<

நீட் தேர்வு வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாக கூறப்படும் புகார் குறித்து சிபிஐ விசாரணைக்கு உத்தரவிடக் கோரி தொடரப்பட்ட வழக்கில், மத்திய அரசு மற்றும் தேசிய தேர்வு முகமை பதிலளிக்க உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இந்த ஆண்டு நடைபெற்ற இளநிலை மருத்துவ படிப்புகளுக்கான நீட் தேர்வில் முறைகேடுகள் நடைபெற்றதாகவும், வினாத்தாள் முன்கூட்டியே வெளியானதாகவும் புகார் எழுந்தது.

இதுதொடர்பாக உச்சநீதிமன்றத்தில் தொடரப்பட்ட பொதுநல வழக்கை விசாரித்த நீதிபதிகள் திரு. விக்ரம்நாத், திரு. சந்திப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு, பீகார் அரசும், சிபிஐயும் இரண்டு வாரங்களில் பதிலளிக்க உத்தரவிட்டு, விசாரணையை அடுத்த மாதம் 8ஆம் தேதிக்கு ஒத்தி வைத்தது.

>>>>><<<<<

பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில், சுகாதார வசதிகளை மேம்படுத்தவும், கல்வியை ஊக்குவிக்கவும் முன்னுரிமை அளிக்கப்பட்டு வருவதாக பழங்குடியினர் நலத்துறை அமைச்சர் திரு. **Jual Oram** தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இன்று தமது துறை பொறுப்புகளை ஏற்றுக் கொண்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனை தெரிவித்தார்.

பழங்குடியினரின் அடிப்படை தேவைகளுக்கு முக்கியத்துவம் அளித்து, அரசு செயல்படும் என்றும் திரு. **Jual Oram** உறுதி அளித்தார்.

>>>>><<<<<

ஊடகங்கள் தவறான செய்திகளை பரப்பினால் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் திரு. எல். முருகன் கூறியுள்ளார்.

மத்திய இணையமைச்சராக தொடர்ந்து இரண்டாவது முறையாக பொறுப்பேற்ற பின்னர், இன்று சென்னை திரும்பிய அவர் விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசினார்.

முக்கியச் செய்தி என்ற பெயரில் ஆதாரமற்ற செய்திகளை வெளியிடும் நிறுவனங்கள்மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று திரு. எல். முருகன் எச்சரித்தார்.

முன்னதாக விமான நிலையத்தில் மத்திய இணையமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

>>>>><<<<<

நாட்டின் வர்த்தக ரீதியிலான நிலக்கரி சுரங்கங்களின் பத்தாவது சுற்று ஏலத்தை நடத்த மத்திய அரசு தயாராக உள்ளது.

மத்திய நிலக்கரி மற்றும் சுரங்கத்துறை அமைச்சர் திரு. கிஷன் ரெட்டி, அடுத்த வாரம் இந்த ஏலத்தை தொடங்கி வைக்கவுள்ளார்.

சுமார் 62 சுரங்கங்கள் ஏலம் விடப்படவிருப்பதாக நிலக்கரி அமைச்சகம் அறிவித்துள்ளது.

>>>>><<<<<

தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவாலின் ஜாமின் மனுமீதான விசாரணை, இம்மாதம் 19ஆம் தேதி நடைபெறும் என்று சிறப்பு நீதிமன்றம் அறிவித்துள்ளது.

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டு, சிறையில் உள்ள திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்த ஜாமின் மனு, கூடுதல் செசன்ஸ் நீதிமன்ற நீதிபதி திரு. முகேஷ் குமார் முன்னிலையில் விசாரணைக்கு வந்தது.

இவ்வழக்கில் பதிலளிக்க அமலாக்கத்துறை அவகாசம் கோரியதை தொடர்ந்து, விசாரணையை வரும் 19ஆம் தேதிக்கு நீதிபதி ஒத்தி வைத்தார்.

**>>>>><<<<<**

உத்ராகண்ட் மாநிலம், **Almora** மாவட்டத்தின் **Binsar** வனவிலங்கு சரணாலயத்தில் ஏற்பட்ட தீ விபத்தை கட்டுப்படுத்தும் பணியில் ராணுவ ஹெலிகாப்டர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

இங்கு ஏற்பட்ட தீ விபத்தில் தீயணைப்புத் துறையை சேர்ந்த நான்கு பேர் உயிரிழந்தனர். 4 பேர் காயமடைந்தனர்.

இதனைத் தொடர்ந்து, **Bhimtal** என்ற இடத்திலிருந்து ராணுவ ஹெலிகாப்டர்களில் தண்ணீர் எடுத்துச் செல்லப்பட்டு, தீயணைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

**>>>>><<<<<**

மகாராஷ்ட்டிர மாநிலம், நாசிக்கின் பல்வேறு இடங்களிலும் தேசிய புலனாய்வு முகமை அதிகாரிகள் நடத்திய சோதனையை தொடர்ந்து, ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மனித கடத்தல் மற்றும் இணையதள குற்றங்கள் தொடர்பாக இந்த சோதனை நடத்தப்பட்டதாகவும், கடந்த மூன்று வாரங்களில் ஏற்கனவே ஐந்து பேர் கைது செய்யப்பட்ட நிலையில், தற்போது சுதர்சன் என்ற நபர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் என்ஐஏ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இதற்கிடையே, சத்திஷ்கர் மாநிலத்தில் கடந்த ஆண்டு சட்டப்பேரவை தேர்தலின் போது, மாவோயிஸ்ட் தீவிரவாதிகள் நடத்திய வெடிகுண்டு தாக்குதல்கள் தொடர்பாக மாநிலத்தின் பல்வேறு இடங்களிலும் என்.ஐ.ஏ அதிகாரிகள் சோதனை நடத்தியுள்ளனர்.

இந்த சோதனையின் போது, செல்ஃபோன்கள் மூன்று லட்சம் ரூபாய் ரொக்கப்பணம் உள்ளிட்டவை பறிமுதல் செய்யப்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

**>>>>><<<<<**

சூடானின் **Darfur** அருகே **El-Fasher** நகரில் அந்நாட்டு ராணுவத்தினர் நடத்தி வரும் தாக்குதலை உடனடியாக கைவிட வேண்டும் என்று ஐ.நா பாதுகாப்பு கவுன்சில் வலியுறுத்தியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலின் கூட்டத்தில் உடனடியாக சூடான் ராணுவம் அந்த நகரிலிருந்து படைகளை விலக்கிக் கொள்ள வேண்டுமென்று வலியுறுத்தி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

15 உறுப்பினர்களைக் கொண்ட ஐ.நா பாதுகாப்பு கவுன்சிலில் சூடானுக்கு எதிராக 14 பேர் வாக்களித்தனர். ரஷ்யா வாக்கெடுப்பில் பங்கேற்கவில்லை.

>>>>><<<<<

**Perugia** சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில், இந்தியாவின் சுமித் நாகல் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இத்தாலியில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர் 6-4, 7-5 என்ற செட்கணக்கில் போலந்தின் **Maks Kasnikowski-**யை வென்றார்.

>>>>><<<<<

**Nantes** சர்வதேச சேலஞ்ச் பேட்மிண்டன் போட்டியில் இந்தியாவின் **Subhankar Dey** காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பிரான்ஸில் நடைபெற்று வரும் இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர், 23-21, 21-16 என்ற செட்கணக்கில் இந்தியாவின் **Abhishek Saini** –யை வென்றார்.

>>>>>END<<<<<